Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 349/2016
Sessions prosecution
depositions of witness for — LW5 Examined As PW3 Chief and Cross

| | | |
|---|---|---|
| Time | : | 12.33 pm – 12.40 pm |
| Name | : | திரு. Rajendiran |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 01st day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது ஓசூர் NGGO காலனி, பாகலூர் ரோட்டில் குடியிருந்து வந்து அசோக் லைலாண்டு கம்பெனியில் பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். அ.சா.1 அனுஷியாவை தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். கடந்த 23/02/2006 ம் தேதி இரவு தூங்கிக் கொண்டு இருக்கும் போது சத்தம் கேட்டு இரவு 2.30 மணிக்கு மேல் அலரல் சத்தம் கேட்டு நான் எழுந்து வீட்டிற்கு வெளியே சென்று பார்த்த போது அ.சா.1 மற்றும் அவருடைய கணவர் கத்தி கொண்டு இருந்தார். நான் என்னவேன்று கேட்ட போது

திருடன் வீட்டிற்குள் வந்துவிட்டதாகவும், ஜன்னலின் வெளியே வைத்திருந்த சாவியை எடுத்து கதவை திறந்து திருடன் உள்ளே நுழைந்து விட்டதாகவும் பெட்ரூமில் இருந்த செல்போன்கள் மற்றும் வாட்ச்களை எடுத்து சென்று விட்டதாகவும் சொன்னார்கள். இரவு காவலர்கள் ரோந்துக்கு வந்த போது நடந்த சம்பவம் குறித்து விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த இரவு நேரத்திற்கு பிறகு போலிசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்ன என்ன பொருட்களை காணாமல் போனது என்று எனக்கு தெரியாது என்றால் நோக்கியா செல்போன், Sonota வாட்ச் ஆகியவை காணாமல் போனதாக சொன்னார்கள். என்ன நிறம் என்ன மாடல் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் சாட்சியாக என்னை போட்டியிருந்த விவரம் சம்மன் வந்த பிறகு தான் தெரியும் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 349/2016
Sessions prosecution
depositions of witness for — LW6 Examined As PW4 Chief and Cross

| | | |
|---|---|---|
| Time | : | 12.45 pm – 12.48pm |
| Name | : | திரு. தியகராஜன் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 01st day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது ஓசூர் NGGO காலனி, பாகலூர் ரோட்டில் குடியிருந்து வந்து Sherdlow கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 அனுஷியாவை தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். கடந்த 23/02/2006 ம் தேதி இரவு தூங்கிக் கொண்டு இருக்கும் போது சத்தம் கேட்டு இரவு 2.30 மணிக்கு மேல் அலரல் சத்தம் கேட்டு நான் எழுந்து வீட்டிற்கு வெளியே சென்று பார்த்த போது போலிசார் ரோந்து பணியில் இருந்தார்கள். என்னவென்று கேட்ட போது திருட்டு நடந்ததாக சொன்னார்கள். இரவு காவலர்கள்

ரோந்துக்கு வந்த போது நடந்த சம்பவம் குறித்து விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த இரவு நேரத்திற்கு பிறகு போலிசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்ன என்ன பொருட்களை காணாமல் போனது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியாக என்னை போட்டியிருந்த விவரம் சம்மன் வந்த பிறகு தான் தெரியும் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions prosecution<br>depositions of witness for | CC. 349/2016<br><br>LW7 Examined As PW5 Chief and Cross |

| | | |
|---|---|---|
| Time | : | 12.49 pm -12.58 pm |
| Name | : | திரு. சுந்தரம் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 01st day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது ஓசூர் பஸ்தியில் குடியிருந்து வந்து ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 அனுஷியாவை தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். கடந்த 23/02/2006 ம் தேதி இரவு தூங்கிக் கொண்டு இருக்கும் போது சத்தம் கேட்டு இரவு 3.30 மணிக்கு போலிசார் திருட்டு சம்பவம் தொடர்பாக அ..சா.1 ன் வீட்டிற்கு வந்து மாதிரி வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை**

**மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் கையெழுத்து செய்த பிறகு போலிசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் போலிசார் விசாரணை செய்தது தொடர்பாக எழுதியுள்ளார்கள். முதல் பத்தியிலும், 2 வது பத்தியிலும் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. வரைபடத்தில் சம்பவம் நடந்த வீட்டில் ஜன்னல் காட்டியுள்ளார்களா என்றால் இல்லை. என்னுடன் கையெழுத்து செய்த இன்னொரு நபர் யார் என்று தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த போது அவர் கையொப்பம் செய்யவில்லை. என்னை தவிர என் முன்னிலையில் வேறு யாரும் நான் கையெழுத்து செய்த தாளில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

ஒம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துரை நடுவர்
விரைவு நீதிமன்றம்
ஒசூர்.